## திருவள்ளூர் தொகுதி கழக வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரன்

### திருத்தணி தொகுதி கூட்டணி கட்சி வேட்பாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை ஆதரித்து

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனை கூட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் அறிவிப்பு !



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் மற்றும் திருத்தணி தொகுதியில் போட்டியிடும் கூட்டணி கட்சி தே.மு.தி.க. வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை வெற்றி பெற செய்திடும் வகையில் அவர்களை ஆதரித்து திருவள்ளூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நாளை 30-03-2026 திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் முன்னிலையில் நடைபெறுகிறது இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் சேகர், சண்முகநாதன் , மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர் குருதாஸ், மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் வி.சி. ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

கூட்டம் முன்னதாக நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார் எனவே ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .

பொருள் :- 2026 சட்டமன்றத் தேர்தலில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வெற்றி பெற செய்வதற்கான பணிகள் மேற்கொள்வது குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

### ஓயா உழைப்பாளி முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும்!

# முதல்வரின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக் கூறி வெற்றி காண்போம்!

### நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

சென்னை, மார்ச் 29–

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒய்வின்றி உழைத்து வருகிறார். முதல்வரின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக் கூறி திராவிட மாடல் ஆட்சி தொடர வெற்றிக் கனியை முதல்வரிடம் சமர்ப்பிப்போம் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் நாம் அனைவரும் சமம் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கப் பெற்று வேற்றுமைகள் கலைந்து அனைவரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே நமது அரசின் நோக்கம் என்றும் நீதி நிலை நாட்டப் பட வேண்டும் என்பதே இந்த ஆட்சி ஒரு சாட்சி.

வன்மம் மனதில் வைத்துக் கொண்டு தொடர்ந்து கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டு வருகிறார் மதபோதகர் பால் தினகரன் நடத்திய கூட்டத்தில் ஆர்எஸ்எஸ் இயக்கம் பல பிரிவுகளில் வழக்குகள் தொடர்ந்து கிறிஸ்துமஸ் அன்று கூட கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். ஒன்றிய அரசு மற்றும் கூட்டணி நண்பர்களின் பொய்யான முகத்தை இந்தத் தேர்தல் தோல் உரித்து காட்டும். விடுமுறை எடுக்காமல்



சேயை செய்திருக்கிறார் என்று உண்மைக்கு மாறாக பேசி ஏமாற்றி வருகிறார்கள்.

எதிர்க்கட்சிகளின் விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டும் என்று பயந்து பாராளுமன்றத்திற்கு வராத ஒரு பிரதமரை கொண்டிருக்கிறது நம் நாடு. மோடி தியாகத்தின் அடையாளம் என்று பொய் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

நமது முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஓய்வு என்பதே அறியாமல் மக்கள் நலன் கருதி உழைத்து வருகிறார். உழைப்பு உழைப்பு என்று ஒன்று தான் நமது முதலமைச்சர் அறிந்ததே!! எடப்பாடி பழனிசாமி சாத்தான்குளம் கொலை வழக்கில் கூட அடித்துக் கொல்லப்பட்டவர்களை மாரடைப்பு என்றும் மூச்சுத் திணறலில் இறந்தனர் என்றும் பொய் பேசி மக்களை திசை திருப்பினார்.

நமது முதலமைச்சர் வலியுறுத்தியதனால் 07.07.2020 சி.பி.சி.ஐ.டி.யிலிருந்து வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றி இன்று நீதி வென்றது. பொய்யர்களின் ஆட்டத்தை மக்கள் தன் வாக்குகள் மூலம் அடக்குவார்கள். தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்று நினைப்பவர்கள் வீழ்வார்கள். இது சரித்திர வெற்றி. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பது உறுதி.

முதலமைச்சர் செய்த அனைத்து சாதனைகளையும் கூறி பட்டி தொட்டி எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு நமது திராவிட இயக்கம் சார்பில் வெற்றிக்கனியை முதலமைச்சரிடம் சமர்ப்பிப்போம்.

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.







சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் தலைமையில், சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநில இலக்கிய அணி பொருளாளரும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான நா.சந்திரபாபு, பல்வேறு தீர்மானங்களை வலியுறுத்தி ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்டத் தலைவர், துணைத்தலைவர், புரவலர், மாவட்ட அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், பகுதிஒன்றிய அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், புரவலர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம்

# கொளத்தூர் கிழக்கு /மேற்கு பகுதிக்குட்பட்ட 70, 70அ, 64, 64அ, 66, 66அ, ஆகிய வட்டங்களில் நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் மற்றும் 14 வட்டங்களில் தேர்தல் பணிமனைத் திறப்பு மற்றும் திரு.வி.க. நகர் தெற்கு பகுதி தேர்தல் பணிமனை திறப்பு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு /மேற்கு பகுதிக்குட்பட்ட 70, 70அ, 64, 64அ, 66, 66அ, ஆகிய வட்டங்களில் நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் மற்றும் 14 வட்டங்களில் தேர்தல் பணிமனைத் திறப்பு மற்றும் திரு.வி.க. நகர் தெற்கு பகுதி தேர்தல் பணிமனை திறப்பு இன்று (29.3.2026 – ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் விவரங்கள் பின்வருமாறு:

| நாள் 29.3.2026 ஞாயிறு | பொருள் | இடம் |
|---|---|---|
| காலை 8.00 மணி | 70, 70அ வட்ட நிர்வாகிகள், BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | திருவள்ளுவர் திருமண மண்டபம், பெரியார் நகர் |
| காலை 8.30 மணி | 64, 64அ வட்ட நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | J.R.மகால் ஜி.கே.எம்.காலனி |
| காலை 9.00 மணி | 64வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | சிட்டிபாபு மேம்பாலம் அருகில் |
| காலை 9.15 மணி | 64அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | மக்காரம் தோட்டம் |
| காலை 9.30 மணி | 66, 66அ வட்ட நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | அம்ரிஷ் மகால், திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் எதிரில் |
| காலை 10.00 மணி | 70வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | லட்சுமி அம்மன் கோவில் அருகில், |
| காலை 10.15 மணி | 66அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | அய்யாலு தெரு, வெற்றிநகர் |
| காலை 10.30 மணி | 66 வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | 1A, பெருமாள் நகர் |
| காலை 10.45 மணி | 70அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | மயிலப்பன் தெரு, நேரு மண்டபம் அருகில் |
| காலை 11.00 மணி | திரு.வி.க.நகர் தெற்கு பகுதி தேர்தல் பணிமனை திறப்பு | 80/3, K.H.ரோடு, ராமலிங்கபுரம், சென்னை–12. |
| மாலை 5.00 மணி | 68வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | 12வது மெயின்ரோடு,பெரியார் நகர் |
| மாலை 5.15 மணி | 68அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | 156, பேப்பர்மில்ஸ் சாலை |
| மாலை 5.30 மணி | 67வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | 15வது தெரு, திரு.வி.க.நகர் குடியிருப்பு |
| மாலை 5.45 மணி | 67அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | சுப்பிரமணிய தோட்டம் |
| மாலை 6.00 மணி | 69வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | மார்க்கெட் தெரு |
| மாலை 6.15 மணி | 69அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | ஜம்புலிங்கம் மெயின்ரோடு |
| மாலை 6.30 மணி | 65வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | பூம்புகார் நகர் 2வது மெயின்ரோடு |
| மாலை 6.45 மணி | 65அ வட்ட தேர்தல் பணிமனை திறப்பு | பூம்புகார் நகர் 2வது மெயின்ரோடு |

மேற்கண்ட ஆலோசனைக்கூட்டங்கள் மற்றும் தேர்தல் பணிமனைகள் திறப்பு விழாவில் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாற அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதி 60 வது வார்டு அ.தி.மு.க.வை சார்ந்த அண்ணா தொழிற்சங்க இணைச் செயலாளர் ஏ.மூர்த்தி மற்றும் என்.முனியாண்டி, என்.மகாதேவன், எம்.பாலாஜி, எம்.விக்ரம் ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். வட்ட கழக செயலாளர் கே.கவியரசு உடன் இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.த. சதாசிவம்

**மார்ச் 29 (2017)**



**ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் டாக்டர் அண்ணா மன்றத்தை துவக்கி, கழகப் பணியாற்ற தொடங்கிய இவர், நெருக்கடிகாலத்தில் 76வது வட்டப் பொறுப்பாளராகவும், பின்னர் ஆயிரம் விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி பொருளாளர், மாவட்ட பிரதிநிதி என கழக அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தலைமை நிலைய அலுவலகச் செயலாளராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**'இந்து' நாளிதழில் பணியாற்றியதோடு, இந்து தொழிற் சங்கத்தில் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.**

**சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும், தமிழ்நாடு மின்சார வாரிய ஆலோசனை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**"இவரையும் அண்ணா அறிவாலயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு – இணை பிரியாத அளவுக்கு தலைமைக் கழகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ்!

# ஜனநாயகத்தை பா.ஜ.க. கேலிக்கூத்தாக்கி வருகிறது!

## திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார்!

*கொல்கத்தா, மார்ச் 29–*

*தலைமை தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ் விவகாரத்தில் நாடாளுமன்ற ஜன நாயகத்தை பாஜக கேலிக்கூத்தாக்கி வருவதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார் தெரிவித்துள்ளது.*

*தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று 193 எம்.பி.க்கள் கையெழுத்திட்ட இம்பீச்மெண்ட் நோட்டீஸ், கடந்த 12ம் தேதி விதி முறைகளின்படி மக்களவை, மாநிலங்களவை செயலகங்களில் வழங்கப் பட்டது. இரண்டு வாரங்கள் கடந்தும் அந்த நோட்டீஸ் மீது இது வரை எந்த நடவடிக்கையும் இல்லை. இதற்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*ஏப்ரல் 2ம் தேதி நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட உள்ள நிலையில், அதற்குள் பதவி நீக்க நோட்டீஸ் குறித்து விவாதிக்கப்படுமா என்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க தீர்மான நோட்டீசை, ஏற்பதாக அறிவிக்க வேண்டும், இல்லாவிட்டால் நிராகரிப்பதாக அறிவிக்க வேண்டும் என்றும், ஆனால், எதுவும் கூறாமல் சபாநாயகர் மௌனமாக இருப்பது ஏன்? என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.*

*அரசுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையே ரகசிய உடன்பாடு உள்ளதா? இல்லை வெளிப்படையான உடன்பாடு உள்ளதா? என்று மாநிலங்களவை திரிணாமுல் காங்கிரஸ் குழுத் தலைவர் டெரிக் ஓ பிரையன் கேள்வி எழுப்பி உள்ளார். நாடாளுமன்ற இரு அவைகளின் செயலங்களும் இதுவரை நோட்டீஸ் குறித்து எதுவும் தெரிவிக்காதால், சட்டபூர்வமான நாடாளு மன்ற நடவடிக்கையை கூட அனுமதிக்காமல் ஒன்றிய பாஜக அரசு நாடாளுமன்றத்தை கேலிக் கூத்தாக்கி வருவதாக டெரிக் ஓ பிரையன் குற்றம் சாட்டி யுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து. ராமதாஸ்

**மார்ச் 29 (2021)**



**தனது இளமை பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**சென்னை மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் பகுதியில் வட்டச் செயலாளராகவும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்..**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**